# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.239/2022</u>

2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னராஜா | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

என்னுடைய சொந்த ஊர் இருர் ஆகும். இறந்துபோன கந்தசாமி எங்கள் ஊரை சேர்ந்தவர். அவர் எனக்கு மாமா முறை வேண்டும். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி சொல்ல வந்தேன். விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. விபத்து நடக்கும் போது காலை 05.00 மணி இருக்கும். என்னுடைய வயல் திருச்சி – சென்னை தேசியநெடுஞ்சாலைக்கு மேற்குபக்கம் உள்ளது. இறந்துபோன கந்தசாமியின் வயல் என்னுடைய காட்டிற்கு மேற்குபுறம் உள்ளது. கந்தசாமி விபத்து சமயத்தில் நின்று கொண்டிருந்தார். அவருடைய மோட்டார் சைக்கிள் பக்கத்தில் இருந்தது. பிக்கப்வேன் அவர்மீதும், அவர் மோட்டார்சைக்கிள் மீதும் மோதியது. நான்

அவரை தாண்டி சென்றவுடன் சத்தம்கேட்டு திரும்பி பார்த்தேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்பதால் யார் மீதும் தவறு என்றும் தெரியாது என்றும், நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் என் உறவினர் என்பதால் அவருக்கு நஷ்டஈடு கொடுக்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.